**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 623/2018**

**CNR.No.TNDG03-005180-2018**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண். 836/2018
U/s.379 IPC ... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1. விக்னேஷ், (19/2018),
த/பெ.தாமோதரன்,
அஞ்சுகம் தெரு,
கிழக்கு கோவிந்தாபுரம்,
திண்டுக்கல்.

2. மதிவாணன், (21/2018),
த/பெ.சின்னச்சாமி,
எண்.21, செக்காடி தெரு,
திருமலைராயபுரம், ஸ்ரீராமபுரம் அஞ்சல்,
திண்டுக்கல்.

3. விஜய் ஜெயசீலன், (20/2018), **(3வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)**
த/பெ.அருள் செல்வம்,
எண்.91-Z, பள்ளிவாசல் தெரு,
கிழக்கு கோவிந்தாபுரம்,
திண்டுக்கல்.

...எதிரிகள்

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 623 of 2018 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Town North Police Station, Dindigul in Cr.No.836/2018 |
| 3. | Name of the accused | A1) Vignesh<br>A2) Mathivanan<br>A3) Vijay Jeyaseelan **(Died)** |
| 4. | Father's Name | A1) Dhamotharan<br>A2) Chinnasamy<br>A3) Arul Selvam |
| 5. | Occupation | - |
| 6. | Residence | A1) Anjugam Street, East Govindhapuram, Dindigul.<br><br>A2) No.21, Sekkadi Street, Thirumalai Rayapuram, Sri Ramapuram Post, Dindigul.<br><br>A3) No.91-Z, Pallivasal Street, East Govindhapuram, Dindigul. |
| 7. | Age | A1- (19/2018)<br>A2- (21/2018)<br>A3- (20/2018) |
| 8. | Date of occurrence | 18.09.2018 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 18.09.2018<br>03.12.2018 |
| 10. | Date of apprehension | A1 – 16.10.2018<br>A2 – 09.10.2018<br>A3 – 11.10.2018 |
| 11. | Date of release on bail | A1 – 13.11.2019<br>A2 – 19.12.2018 |

<table>
<tr><td></td><td></td><td colspan="3">A3 – 28.01.2019</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">17.12.2018</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 24.12.2018 the accused were questioned on substance of accusation U/s.394 IPC. Accused were denied the case as false and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="9">15</td><td rowspan="9">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>29.07.24</td><td>18.05.26</td></tr>
<tr><td>PW2</td><td>29.07.24</td><td>11.05.26</td></tr>
<tr><td>PW3</td><td>14.03.25</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>10.11.25</td><td>10.11.25</td></tr>
<tr><td>PW5</td><td>09.02.26</td><td>-</td></tr>
<tr><td>PW6</td><td>23.02.26</td><td>-</td></tr>
<tr><td>PW7</td><td>09.03.26</td><td>09.03.26</td></tr>
<tr><td>PW8</td><td>17.03.26</td><td>17.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">24.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, 1 , 2 எதிரிகள் தான், அ.சா.1ன் கழுத்தில் அணிந்திருந்த 9 பவுன் தங்க செயினை அத்துச் சென்றார்கள் என்பதை அரசு தரப்பிலிருந்து, 1, 2 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 3வது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 03.12.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.623/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.திருவேங்கடம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

### <u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 18.09.2018ம் தேதி புகார்தாரர் இரவு கடை வேலைகளை முடித்துவிட்டு தனது வீட்டிற்கு போவதற்காக இரவு 21.30 மணிக்கு திருச்சி ரோட்டில் இரயில்வே மேம்பாலத்தில் தனக்குச் சொந்தமான TN 57 AK 7414 என்ற இருசக்கர வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு பார்த்து ஓட்டிச் சென்றபோது 1வது

எதிரி விக்னேஷ் என்ற விக்கி TN 49 BF 1392 என்ற எண்ணுள்ள Yamaha FZ வாகனத்தை ஓட்ட மேற்படி வாகனத்தில் 1வது எதிரிக்கு பின்னால் இவ்வழக்கின் 3வது எதிரி உட்கார்ந்து கொண்டும், அவருக்குப் பின்னால் 2வது எதிரி மதிவாணன் என்பவர் உட்கார்ந்து கொண்டும் புகார்தாரரை பின்தொடர்ந்து சென்று புகார்தாரரின் கழுத்தில் இருந்த தங்க செயினை அத்து திருடவேண்டும் என்று 3 பேரும் பேசி முடிவு செய்து 1வது எதிரி விக்னேஷ் என்ற விக்கி புகார்தாரரின் அருகில் மேற்படி வாகனத்தை ஓட்டிச் சென்று வாகனத்தின் வேகத்தை குறைத்தபோது 2வது எதிரி மதிவாணன் புகார்தாரரின் கழுத்தில் இருந்த ரூ.1,35,000/– மதிப்புள்ள சுமார் 9 பவுன் தங்க செயினை அத்து திருடிக் கொண்டு மேற்படி வாகனத்தில் தப்பிச் சென்ற குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதச படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II.வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:</u>**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 17.12.2018ம் நாள் அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான இதச சட்டப்பிரிவு 379–ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக் வினாவியபோது

எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக இதச சட்டப்பிரிவு 379–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளிகள் இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

## III. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

## IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:

4. அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் "கடந்த 18.09.2018ம் தேதி இரவு 09.30 மணிக்கு இரவு கடை வேலைகளை முடித்துவிட்டு தனது வீட்டிற்கு போவதற்காக இரவு 21.30 மணிக்கு திருச்சி ரோட்டில் இரயில்வே மேம்பாலத்தில் தனக்குச் சொந்தமான TN 57 AK 7414 என்ற இருசக்கர வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு பார்த்து ஓட்டிச் சென்றபோது, அடையாளம் தெரியாத நபர்கள் 3 நபர்களில் பின்னால் அமர்ந்திருந்த நபர் தனது கழுத்தில் அணிந்திருந்த 9 பவுன் தங்க நகையை அத்துக் கொண்டு சென்றார்கள்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் "கடந்த 18.09.2018ம் தேதி இரவு 10.00 மணிக்கு தான் தனது வீட்டில் இருந்தபோது தனது அண்ணி தனக்கு போன் செய்து சிட்டி மருத்துவமனை அருகே உள்ள மேம்பாலத்தில் அவரது இருசக்கர வாகனத்தில் கடையை மூடிவிட்டு இரவு 10.00 மணியளவில் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது, 9 பவுன் தங்க நகையை அத்துக் கொண்டு சென்றுவிட்டார் என்று போன் மூலமாக தகவல் கேள்விப்பட்டதாகவும், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அவரது சாட்சியத்தில் "கடந்த 2018ம் வருடம் திண்டுக்கல் கோ–ஆபரேட்டில் தற்காலிக டிரைவராக வேலை செய்து வந்ததாகவும், இரவு 10.00 மணியளவில் சீலப்பாடி செல்வதற்காக சிட்டி மருத்துவமனை மேம்பாலத்தில் வந்து கொண்டிருந்தபோது எனக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு பெண்ணிடம் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் அந்த பெண் அணிந்திருந்த தங்க செயினை அத்துச் சென்றதாகவும், தானும் சிறிது தூரம் சென்று பார்த்ததாகவும், இருட்டில் கண்டுபிடிக்க முடியவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில் "பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்றும், கடந்த 6 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை என்றும், சிட்டி மருத்துவமனை மேம்பாலம் அருகே

வந்துகொண்டிருந்தபோது, பார்வை மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் அ.சா.ஆ.3" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 தனது சாட்சியத்தில், "கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை என்றும், தானும் தனது நண்பரும் திருச்சி ரோட்டில் காலை 08.00 மணியளவில் ரயில்வே பாலத்திற்கு அருகே சென்றபோது போலீசார் ஒரு குற்றவாளியை பிடித்து விசாரித்ததாகவும், அதற்கு சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், 11.10.2018ம் தேதி 08.00 மணிக்கு எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சியாக கையொப்பம் அ.சா.ஆ.4 என்றும், 09.15 மணிக்கு எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனத்திற்கான அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்றும், 09.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.5 என்றும், 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.6" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 தனது முதல் விசாரணையில் "கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை என்றும், தானும் பாண்டியராஜனும், திருச்சி ரோடு மேம்பாலம் கீழ் வந்துகொண்டிருந்தபோது அவர் திருட்டு கூட்டத்தில் சம்மந்தப்பட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்றும், 1வது கையொப்பம் அ.சா.ஆ.7 என்றும், 09.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.8 என்றும், 10.30 மணிக்கு தயார் சய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.9 என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

10. மேலும், மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.7 தனது முதல் விசாரணையில் "கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை என்றும், பழனிரோடு காந்தி மார்க்கெட் வளைவில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே போலீசார் நின்றுகொண்டிருந்தபோது தானும், மற்றொரு நபரும் அங்கு சென்றபோது, ஒரு நபரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.10 என்றும், அன்றையதினம் தயாரிக்கப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.11" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது நீதிமன்ற சாட்சியத்தில் "வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அத்தாட்சியில் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR No.142/2018 ஆக பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்". அவர் மூலமாக அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றது.

## V. எதிரிகளுக்கு குு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்

12. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 21.03.2026ம் தேதி தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தனர்.

## VI. எதிரிகள் தரப்பு சாட்சிகள்

13. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அதனால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VII. வாதுரைகள்

### 1. அரசு தரப்பில்

14. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் இவ்வழக்கின் எதிரிகள் புகார்தாரரிடம் வழக்குச் சொத்துக்களை கொள்ளையடித்துச் சென்றதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதாகவும்,

எனவே இவ்வழக்கில் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பில்**

15. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீது இவ்வழக்கு தவறாக பதியப்பட்டுள்ளதாகவும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிகளை அடையாளப்படுத்தி எந்தவொரு சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**VIII.ஆய்விற்குரிய பிரச்சனை**

16. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசுத் தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

## தீர்ப்புரை

17. அரசு தரப்பானது, கடந்த 18.09.2018ம் தேதி, புகார்தாரர் இரவு கடை வேலைகளை முடித்துவிட்டு தனது வீட்டிற்கு போவதற்காக இரவு 21.30

மணிக்கு திருச்சி ரோட்டில் இரயில்வே மேம்பாலத்தில் தனக்குச் சொந்தமான TN 57 AK 7414 என்ற இருசக்கர வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு பார்த்து ஓட்டிச் சென்றபோது 1வது எதிரி விக்னேஷ் என்ற விக்கி TN 49 BF 1392 என்ற எண்ணுள்ள Yamaha FZ வாகனத்தை ஓட்ட மேற்படி வாகனத்தில் 1வது எதிரிக்கு பின்னால் இவ்வழக்கின் 3வது எதிரி உட்கார்ந்து கொண்டும், அவருக்குப் பின்னால் 2வது எதிரி மதிவாணன் என்பவர் உட்கார்ந்து கொண்டும் புகார்தாரரை பின்தொடர்ந்து சென்று புகார்தாரரின் கழுத்தில் இருந்த தங்க செயினை அத்து திருடவேண்டும் என்று 3 பேரும் பேசி முடிவு செய்து 1வது எதிரி விக்னேஷ் என்ற விக்கி புகார்தாரரின் அருகில் மேற்படி வாகனத்தை ஓட்டிச் சென்று வாகனத்தின் வேகத்தை குறைத்தபோது 2வது எதிரி மதிவாணன் புகார்தாரரின் கழுத்தில் இருந்த ரூ. 1,35,000/– மதிப்புள்ள சுமார் 9 பவுன் தங்க செயினை அத்து திருடிக் கொண்டு மேற்படி வாகனத்தில் தப்பிச் சென்ற குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதச –வின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

18. இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## குற்ற நிகழ்வு

19. மேற்சொன்ன குற்ற நிகழ்வை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பில் இருந்து குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலனை செய்யும் போது, " 18.09.2018 இரவு சுமார் 10.00 மணிக்கு திண்டுக்கல்– திருச்சி ரோடு சிட்டி ஆஸ்பத்திரி மேம்பாலத்தில் நடுப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் பதிவெண் தெரியாத ஒரு பைக்கில் வந்த 3 நபர்களில் பின்னால் அமர்ந்திருந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 9 பவுன் மதிப்புள்ள தங்கச் செயினை அறுத்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டார்கள்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.12 ஆன முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்யும் போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் போன்றவற்றைப் பரிசீலனை செய்யும்போதும் மற்றும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 ஆன அத்தாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.15 ஆன படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துகளைப் பரிசீலனை செய்யும் போதும், மேற்சொன்ன குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. இருப்பினும், எதிரிகள் தான் மேற்படி குற்ற நிகழ்வில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கு எதிரிகளை கைது செய்து பின்

எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதைப் பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

**<u>கைது ஒப்புதல் வாக்குமூலம் அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்</u>**

21. குற்ற நிகழ்வு நடந்த பின்பு எதிரிகளை கைது செய்து எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசார்கள் படிவம் 91–ன் மூலம் அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்களை கைப்பற்றியுள்ளனர்.

22.மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருத இயலாது. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிகள் தான் செய்தார்களா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 தனது முதல் விசாரணையில் "கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை, நானும் எனது நண்பர் குணசேகரனும் திருச்சி ரோட்டில் காலை 08.00 மணியளவில் ரயில்வே பாலத்திற்கு அருகே சென்றபோது போலிசார் ஒரு குற்றவாளியைப் பிடித்து விசாரித்ததாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, எதிரிகள் யாரும் தனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ, தனது முன்னிலையில் வழக்குச் சொத்துக்களை எதிரிகள் போலிசாரிடம் ஒப்படைத்ததாகவோ, அந்த வழக்குச்

சொத்துக்களை போலிசார் தனது முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

23. மேலும், மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 அவரது முதல் விசாரணையில் "காலை 08.00 மணியளவில் நானும் பாண்டியராஜனும் திருச்சி ரோடு மேம்பாலம் கீழ் வந்துகொண்டிருந்தபோது, போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் திருட்டுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார். செயின் மற்றும் செல்போன், இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார். அந்த பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்" என்று அரசு தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளபோதும், அவர் தனது குறுக்கு விசாரணையில், "நான் எதிரிகளைப் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களிடமிருந்து போலிசார் என்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றும்போது, நான் பொருட்களை பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

24. மேலும், மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.7 அவரது முதல் விசாரணையில் "பழனிரோடு காந்தி மார்க்கெட் வளைவில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே போலிசார் நின்றுகொண்டிருந்தபோது, நானும் மற்றொரு நபரும் அங்கு சென்றபோது, போலிசார் ஒரு நபரை

விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் பதிவு செய்து எங்களிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள். அவர் தங்க நகை மற்றும் மோதிரத்தை எங்கள் முன்னிலையில் போலீசாரிடம் எடுத்து ஒப்படைத்தார் அதற்கும் போலீசார் தனியாக எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அவர் தனது குறுக்கு விசாரணையில், " நான் எதிரியைப் பார்ப்பதற்கு முன்பு எதிரி போலிசாரிடம் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அவரிடமிருந்து இருந்து என்ன வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான் என்றும், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

25. ஆகவே, திருட்டு சம்பந்தமான குற்ற வழக்குகளில், அதிலும் எதிரிகளை அடையாளம் காண முடியாத வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அளிக்கின்ற சாட்சியங்களை வைத்து மட்டுமே எதிரிகளின் குற்றச் செயலை அறிய முடியும். ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5, அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ, அல்லது அவர்கள் ஈடுபட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது அவர்களிடமிருந்து தான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது பற்றியோ, அத்தாட்சி தயார் செய்யப்பட்டது பற்றியோ உறுதியூட்டும்

வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்றும், அந்த சொத்துக்கள் அனைத்தும் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டதா என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

**புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

26. மேலும், இவ்வழக்கில் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி அவரது முதல் விசாரணையில் "09.10.2018ம் தேதி திண்டுக்கல் –பழனி ரோடு மேற்கு தாலுகா அலுவலகம் செல்லும் ரோட்டில் போலீஸ் பார்ட்டியுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக TN 49 BF 1392 Yamaha FZ இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி ஒருவரை நிறுத்தி விசாரிக்க எதிரி மதிவாணன் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டதால் காரணம் கூறி கைது செய்து, எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மோகன்குமார், சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், எதிரி ஆஜர் செய்த TN 49 BF 1392 Yamaha FZ இருசக்கர வாகனம் மற்றும் சுமார் 9 பவுன் மதிப்புள்ள தங்க செயின் ஆகியவற்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாக" அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

27. ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5, அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் மேற்சொன்னவாறு

முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளபோது, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் 1 முதல் 3 எதிரிகள் எவ்வாறு இவ்வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றோ அல்லது எவ்வாறு அவர்கள் இவ்வழக்கில் குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று எதிரிகளின் குற்றச் செயல்களை உறுதியூட்டும் விதமாக நிரூபிக்கும் வகையில் புலன் விசாரணை அதிகாரி சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் 1 , 2 எதிரிகள் தான் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. முடிவாக, 1 , 2 எதிரிகள் தான், அ.சா.1ன் கழுத்தில் அணிந்திருந்த 9 பவுன் தங்க செயினை அத்துச் சென்றார்கள் என்பதை அரசு தரப்பிலிருந்து, 1, 2 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 3வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

29.இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட RPR No. 142/2018ல் உள்ள வழக்குச் சொத்தான வரிசை எண். 1ல் உள்ள வழக்குச் சொத்தை இந்நீதிமன்ற Crl.M.P.No.8014/2018 நாள்.22.10.2018 உத்தரவின்படி மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளர் மனு செய்து ஏற்கனவே இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு

பின்பு மனுதாரர்/வழக்குச் சொத்தின் உரிமையாளருக்கு நிரந்தரமாக பாத்தியப்பட உத்தரவிடப்படுகிறது. வரிசை எண்.2ல் உள்ள வழக்குச் சொத்தான TN 49 BF 1392 என்ற பதிவெண் உள்ள Yamaha F2 இருசக்கர வாகனத்தை மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளர் மேல்முறையீடு காலத்திற்கு பின்பு இந்நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொள்ள இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை, இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.06.11 13:12:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சித்ரா<br>க/பெ. முத்துக்குமார் | 29.07.2024 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | முத்துராஜ்<br>த/பெ. சுப்பிரமணி | 29.07.2024 | அ.சா.ஆ.2 |
| 3. | அ.சா.3 | ராஜ்குமார்<br>த/பெ. பழனிச்சாமி | 14.03.2025 | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | அ.சா.4 | கண்ணன்<br>த/பெ. துரைராஜ் | 10.11.2025 | அ.சா.ஆ.3 |
| 5. | அ.சா.5 | பாண்டியராஜன்<br>த/பெ. செல்லையா | 09.02.2026 | அ.சா.ஆ.4<br>முதல்<br>அ.சா.ஆ.6 |
| 6. | அ.சா.6 | குணசேகரன்<br>த/பெ.நாகரத்தினம் | 23.02.2026 | அ.சா.ஆ.7<br>முதல்<br>அ.சா.ஆ.9 |
| 7. | அ.சா.7 | சரவணக்குமார்<br>த/பெ. முருகன் | 09.03.2026 | அ.சா.ஆ.10,<br>அ.சா.ஆ.11 |
| 8. | அ.சா.8 | தெய்வம்<br>(கூடுதல் மாவட்ட காவல் கணிகாணிப்பாளர்) | 17.03.2026 | அ.சா.ஆ.12<br>முதல்<br>அ.சா.ஆ.17 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 18.09.2018 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | 18.09.2018 | புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 19.09.2018 | பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.5 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.5 | 11.10.2018 | 11.10.2018ம் தேதி 09.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.5 | 11.10.2018 | 11.10.2018ம் தேதி 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.6 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.6 | 11.10.2018 | 11.10.2018ம் தேதி 09.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 9. | அ.சா.ஆ.9 | அ.சா.6 | 11.10.2018 | 11.10.2018ம் தேதி 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 10. | அ.சா.ஆ.10 | அ.சா.7 | 09.10.2018 | எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் |
| 11. | அ.சா.ஆ.11 | அ.சா.7 | 09.10.2018 | 09.10.2018ம் தேதி 10.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 12. | அ.சா.ஆ.12 | அ.சா.8 | 18.09.2018 | முதல் தகவல் அறிக்கை |
| 13. | அ.சா.ஆ.13 | அ.சா.8 | 19.09.2018 | மாதிரி வரைபடம் |
| 14. | அ.சா.ஆ.14 | அ.சா.8 | 19.09.2018 | பார்வை மகஜர் |
| 15. | அ.சா.ஆ.15 | அ.சா.8 | 09.10.2018 | படிவம் 91 |
| 16. | அ.சா.ஆ.16 | அ.சா.8 | 09.10.2018 | எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 17. | அ.சா.ஆ.17 | அ.சா.8 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.06.11 13:12:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**<u>குறிப்பு:</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.